


## விழியீர்ப்பு விசை . . . (தபூ சங்கர்)

நன்றி : விழியீர்ப்பு விசை

வெளியீடு : சாரல்,
73 அபிபுல்லா சாலை,
தியாகராய நகர்,
சென்னை–17.

விலை : ரூ 35 / –

என்னுடையது என்று நினைத்துத்தான்
இதுவரையில் வளர்த்து வந்தேன்.

ஆனால்
முதல்முறை உன்னைப் பார்த்ததுமே
பழக்கப்பட்டவர் பின்னால் ஓடும் நாய்க்குட்டி மாதிரி
உன் பின்னால் ஓடுகிறதே
இந்த மனசு.

**********************************************************************************************************

சற்றுமுன் நீ நடந்துபோன
தடயம் எதுவுமின்றி
அமைதியாய்க் கிடக்கிறது வீதி.

எனினும்
அதிகவேக ரயிலொன்று
கடந்துபோன தண்டவாளம் போல
இன்னும் அதிர்கிறது
என் இதயம்.

**********************************************************************************************************

சூரியன் வந்த பிறகுதான்
நீ வருகிறாய் என்றாலும்
நீ வரும்போதுதான்
விழிக்கிறது இந்த வீதி.

**********************************************************************************************************

இந்த மலையைக் குடைந்து
ரயில்பாதை அமைத்தவனுக்காவது தெரியுமா
உன் கல்மனசுக்குள்
நுழைவது எப்படி என்பது.

*****************************************************************************************************************

என்னை நல்லவன் என்று
நினைத்துக் கொண்டிருந்தேன்.
அந்த நினைப்பில்
மண் அள்ளிப் போட்டுவிடும் போலிருக்கிறது
உன் மீதான காதல்.

உன் வீட்டுமுன் காய்ந்து கொண்டிருக்கும்
உனது ஆடையைத் திருடி வரச்சொல்லி
நச்சரிக்கிறதே மனசு.

*****************************************************************************************************************

எனது அறையின் தினசரி காலண்டர்கூட
கேலி பேசுகிறது என்னை.
முதல் நாள் உன்னைப் பார்த்திருந்தால்
அந்தத் தேதியை மிகமெதுவாகக் கிழிக்கிறேனாம்.
பார்க்கவில்லையெனில்
பிய்த்துக் கசக்கி எறிகிறேனாம்.

*****************************************************************************************************************

உன்னைக் கேலி பேசுபவனையெல்லாம்
முறைத்துப் பார்க்கிறாய்
உன்னை நேசிக்கிற என்னை மட்டும்
சாதாரணமாகக்கூட பார்க்க மறுக்கிறாயே.

*****************************************************************************************************************

எப்போதும்
சுரிதாரிலேயே பார்த்த உன்னை
முதல்முறை சேலையில் பார்த்தபோது . . .
அய்யோ அந்த சேலை
உன்னைக் கட்டிக்கொண்டிருக்கிறதே.

*****************************************************************************************************************

உனது
சுரிதாரின் துப்பட்டாவும்
சேலையின் மாராப்பும்
விலகும் போதெல்லாம்
சரிசெய்து விடுகிற
வேலைக்காரனாய் என்னை சேர்த்துக்கொள்ளேன்.

நீயோ
சூரிய வெளிச்சம் முகத்தில் படாமலிருக்க
புத்தகத்தால் உன் முகத்தை
மறைத்துக் கொள்கிறாய்.
சூரியனோ
உன்னைப் பார்க்க முடியாத கோபத்தில்
எல்லோரையும் சுட்டெரித்துக்கொண்டிருக்கிறது.

************************************************************************************************************************

பயணம் முடிந்ததும்
நீ வீசிவிட்டுப்போன பயணச்சீட்டு
வீதியில் கிடந்து புலம்பிக் கொண்டிருந்தது
பயணம் முடிந்துவிட்டதை நினைத்து.

************************************************************************************************************************

எல்லா பெண்களும்
உதட்டை அழகாய்க் காட்டுவதற்காக
லிப்ஸ்டிக் பூசிக்கொள்கிறார்கள்.
நீ மட்டும்தான்
உதட்டின் அழகை மறைத்துக்கொள்வதற்காக
லிப்ஸ்டிக் பூசிக்கொள்கிறாய்.

************************************************************************************************************************

துடிப்பதைவிட
உன்னை நினைப்பதற்கே
நேரம் சரியாக இருக்கிறது
என் இதயத்திற்கு

************************************************************************************************************************

புவியின் ஈர்ப்பு விசையில்
எப்போதாவது தவறி விழுந்திருக்கிறேன்.
உனது விழியின் ஈர்ப்பு விசையில்
எப்போதும் தவறாமல் விழுந்துகொண்டிருக்கிறேன்.

************************************************************************************************************************

முதல் முறை
உனது வீட்டிற்கு வந்தபோது
நான் பார்த்து ஆச்சர்யப்பட்டது
உனது அறையிலிருக்கும்
ஆளுயரக் கண்ணாடியைத்தான்
“ஏன் ?”
இத்தனை நாட்களாய்
உன் அழகையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தும்
விரிசல் எதுவும் விழாமல்
அப்படியே இருக்கிறதே !

உன்னை ஏன்
இப்படிக் காதலித்துக் தொலைக்கிறேன்
அடிக்கிற அம்மாவின்
கால்களையே கட்டிக்கொண்டு

அழுகிற குழந்தை மாதிரி

**********************************************************************************************************

எனது இரண்டு தோள்களுக்கும் இடையே
பெரும் சண்டை நடக்கிறது உன்னால்
“என்னாலா . . . என்ன சண்டை ?”
எனது எந்தத் தோளில்
நீ முதலில் சாய்வாய்
என்கிற பந்தயச் சண்டை

**********************************************************************************************************

தொலைபேசியில் எல்லாம்
நீ எனக்கு முத்தம் தராதே
அது உன் முத்தத்தை எடுத்துக் கொண்டு
வெறும் சத்தத்தை மட்டுமே
எனக்குத் தருகிறது.

**********************************************************************************************************

சிறுமியைப்போல்
கடல் அலையில் கால் நனைத்து
விளையாடிக்கொண்டிருந்தாய்
கடலோ
கொந்தளித்துக்கொண்டிருந்தது.

**********************************************************************************************************

ஏற்கனவே பூத்த பூதான்
எனினும்
நீ சூடும்போது
மறுபடியும் பூக்கிறதே !

**********************************************************************************************************

கும்பலில் எல்லாம்
நீ போகாதே . . .
யார் யாரோ மிதிக்கிறார்கள்
உன் நிழலை.

**********************************************************************************************************


நான்
கிள்ளிய இடத்தில்
ரத்தம் கட்டிவிட்டது
என்று புலம்புகிறாயே . . .
முட்டாள் . . . நன்றாகப் பார்
கட்டியிருப்பது
ரத்தமா
காதலா என்று

*************************************************************************************************************

குளித்துவிட்டு வந்த நீ
அறையில் என்னைப் பார்த்ததும்
“நான் ஆடை மாற்ற வேண்டும்.
ஹாலுக்குப் போ” என்றாய்
நான் எழுந்து நடக்கையில் . . .
“போன்னு சொன்னா போயிடறதா” என்று முனகினாய்
அட நீயும் காதலிக்கக் கற்றுக் கொண்டாயே!

*************************************************************************************************************

உனது ஆடையையும்
எனது ஆடையையும்
அருகருகே காயவைத்திருக்கிறாயே
இரண்டும்
காய்வதை விட்டுவிட்டு
விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்



*********************************************************************************

எல்லா கவிதைகளுமே
உன்னைப் பற்றியவைதாம் எனினும்
ஒரு கவிதைகூட
உன்னை மாதிரி இல்லையே